அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 02/2021(II)

எனது இலக்கம் : EST-6/03/LEA/3381
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.05.10

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்களின், நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்

## அரச சேவையத் தடையின்றி நடாத்திச் செல்லல்

2021.03.05 ஆம் திகதிய 02/2021 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வெளியிடப்பட்ட 2021.04.27 ஆம் திகதிய 02/2021(I) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்குப் பதிலாக 2021.05.10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரச நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைக்கும் போது பின்வரும் ஏறபாடுகளின் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும்.

02. அரசாங்கத்தின் செயற்பாடுளை முடக்கமடையாமல் கொண்டு நடாத்துவதற்கு அத்தியவசியமான ஆகக் குறைந்த ஊழியர்களை பணிக்கு அழைப்பதற்கு தீர்மானிக்கும் அதிகாரம் உரிய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு/ திணைக்களத் தலைவர்களுக்கு/ நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

03. அவ்வாறு ஆகக் குறைந்த ஊழியர்களை சேவைக்கு அழைக்கும் சந்தர்ப்பத்திலும் சுழற்சி முறையொன்றை அல்லது வேறு முறையான வழிமுறையொன்றைப் பின்பற்றுவது அவசியமாகும்.

04. அவ்வாறு சுழற்சி முறையான்றை அல்லது ஒழுங்கான வழிமுறையொன்றை உருவாக்கியதன் பின்னர், அதற்கிணங்க உத்தியோகத்தர் ஒருவர் பணிக்குச் சமுகமளிக்க வேண்டிய ஒரு தினத்தில் பணிக்குச் சமுகமளிக்காதவிடத்து, அந்நாளை அந்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட லீவுகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

05. மேலே குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க அரசாங்க நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைக்கும் போது கர்ப்பிணிகளாகவுள்ள உத்தியோகத்தர்களை சேவைக்கு அழைக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

06. சுழற்சி முறைக்கு அல்லது சேவைக்கு அழைப்பதற்குப் பின்பற்றும் முறையான வழிமுறைக்கு இணங்க பணிக்கு அழைக்கப்படாத நாட்களிலும் ஒவ்வொரு அரசாங்க உத்ததியோகத்தரும் இணைய வழியில் (Online) தனது கடமைகளுக்கு செயற்பாடுகளைச் செய்வதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

07. கொவிட்-19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக சுகாதாரத் துறையினரால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு ஏற்ற விதத்தில் சேவை நிலையங்களுக்கு உத்தியோகத்தர்களையும் பொது மக்களையும் அழைக்கும் போது பின்வரும் வழிகாட்டல்களையும் பின்பற்ற வேண்டும்.

(அ) முடியுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளுக்குப் பதிலாக தொகுதியிலுள்ள வாகனங்களையும், ஒதுக்கப்பட்ட வாகனங்களையும் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட வாகனங்களையும் பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும்.

(ஆ) அத்தியவசியமான விடயங்களுக்காகவன்றி பொது மக்கள் சேவை நிலையங்களுக்கு வருவதை மட்டுப்படுத்த வேண்டும்.

(இ) முடியுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இணைய வழியில் (Online) சேவைபெறுநர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

08. எவரேனும் அரச உத்தியோகத்தரொருவர் தற்போதைய சூழ்நிலையில் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளின் கீழ் தனிமைப்படுத்தப்பட்டிருந்து, அது அரசாங்க தனிமைப்படுத்தல் சட்ட திட்டங்களை மீறியமைக்கான தண்டனையாக இல்லாதிருப்பின், அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு அந்த தனிமைப்படுத்தல் காலப் பகுதியை தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12:9 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க முழுமையான சம்பளம் கொண்ட ஒரு காலப் பகுதியாகக் கருதுதல் வேண்டும்.

09. கொவிட் 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக அரசாங்கத்தினால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள சுகாதார அறிவுறுத்தல்களுக்கும் எதிர் காலத்தில் வெளியிடப்படும் சுகாதார அறிவுறுத்தல்களுக்கும் இணங்க தமது நிறுவனங்களில் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் நிறுவனத் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

10. இதன் மூலம் அத்தியவசியமான அரச சேவகளைத் தொடர்ச்சியாகக் கொண்டு நடாத்துதல், அரசாங்க நிறுவனங்களை கொவிட் 19 இலிருந்து விடுபட்ட வலயங்களாகப் பேணி வருதல், அரசாங்க உத்தியோகத்தர்கள் கொவிட் 19 அச்சுறுத்துதலுக்கு ஆளாவதைத் தடுத்தல், அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு தொற்று ஏற்படாமல் தடுத்தல், கொவிட் 19 வைரஸ் பரவுவதைக் குறைத்தல் என்பன விசேடமாக எதிர்பார்க்கப்படுகின்றன என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு